சென்றுக்குளி கிளை நூலகம்

Y.M.C.A.

Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    புரட்டாதி 18    (04 - 10 - 1992)    ஞாயிற்றுக்கிழமை    ஓசை 229

## இடம்பெயர்ந்த ஆசிரியருக்கு சம்பளம் இடைநிறுத்தம்

தீவகத்தில் இருந்து அண்மையில் யாழ் நகருக்கு வந்து வேலணைக் கோட்டப் பாடசாலைகளில் கடமையாற்றிவரும் ஆசிரியர்களுக்கு சம்பளக் கொடுப்பனவுகள் இடை நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. இவர்களுக்கான சம்பளம் இடைநிறுத்தி வைப்பதற்கான உத்தரவை யாழ். பிரதேசக் கல்வித் திணைக்களம் விடுத்துள்ளது புரட்டாதி மாதத்தில் இருந்து இவர்களுக்கான சம்பள இடைநிறுத்தம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. வடகிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் டணிப்புரை கிடைக்கும்வரை இடைநிறுத்த உத்தரவு அமுலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# ராணுவதோல்விகளுக்கு அரசு இருட்டடிப்பு

# படையினர் மனவுறுதி உடையுமென அச்சம்

## கட்டைக்காடு பேரிழப்பு பற்றி மௌனம்

(யாழ்ப்பாணம்)


வடக்கு-கிழக்கு யுத்தமுனையில் இராணுவத்தினருக்கு ஏற்பட்டுவரும் பாரிய உயிர் இழப்புக்களையும், இராணுவத்தளபாட இழப்புக்களையும் சிறிலங்கா அரசு இருட்டடிப்புச் செய்து வருகின்றது. உடைந்துபோயுள்ள இராணுவத்தினரின் மனவுறுதிமேலும் பாதிப்புறாமல் இருப்பதற்கும், போரில் மேலும் பின்னடைவுகள் ஏற்படாமல் தடுப்பதற்குமே அரசு இந்த இருட்டடிப்பைச் செய்வதாகத் தெரிய வருகின்றது. இந்தவகையில் கட்டைக்காட்டில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இராணுவத்திற்கு ஏற்பட்ட பாரிய இழப்பு குறித்தும் அரசாங்கம் மௌனம் சாதிப்பதோடு, அதை ஒரு சிறிய தாக்குதல் எனக் காட்ட முயற்சித்துள்ளது.

கடந்தபல மாதங்களாக வடக்கிலும், கிழக்கிலும் புலிகள் மேற்கொண்டுவரும் அதிரடித் தாக்குதல்கள் பெரும், உயிர், மற்றும் இராணுவதளபாட இழப்புக்கள் ஏற்பட்டு வருகின்றமை தெரிந்ததே இத்தாக்குதல்களினால், பெரிதும் மனவுறுதி தளர்ந்து போயுள்ளது இராணுவத்தினர் எதிர்காலத்தில் இராணுவ வெற்றி சாத்தியமாகாத ஒன்று என சிந்திக்கத் தலைப்பட்டுள்ளதாகவும் கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், இழப்புக்கள் தொடர்ந்தும் அதிகரித்துச் செல்வதனால், இராணுவத் தோல்விகள், இழப்புகள் பற்றி இருட்டடிப்பு செய்வதில் அரசு அக்கறை காட்டத் தொடங்கியுள்ளது. இதன் பிரகாரம், இராணுவ இழப்புக்களைக் குறைத்துக்காட்டுதல், பிழையான தகவல்களை வழங்குதல், அரசகட்டுப்பாட்டிலுள்ள மக்கள் தொடர்பு சாதனங்களில் செய்திகளை வெளியிடாமல் மறைத்தல் போன்றவற்றில் கவனம் செலுத்தி வருகின்றது.

இந்த வகையில், கட்டைக்காட்டில், ஏற்பட்டமோதலை சிறிய தாக்குதல் சம்பவம் எனக்காட்ட முற்பட்டுள்ளது. இதில், இராணுவத்தினருக்கு

[4 ஆம் பக்கம் பார்க்க]



பதவியா பராக்கிரமபுரப் பகுதியில் அமைந்திருந்த கோங்வேவ மினி முகாம் கடந்த வியாழனன்று நள்ளிரவு விடுதலைப் புலிகள் நடாத்திய அதிரடித் தாக்குதலின் போது கைப்பற்றப்பட்டது. அம்முகாமிலிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களையே படத்தில் காண்கின்றீர்கள்.

## 6 வடபகுதி இளைஞர்கள் நீர்கொழும்பில் கைது

(கொழும்பு)

நீர்கொழும்பு நகரப் பகுதியில் உள்ளவீடுகளைசோதனை நடத்திய பொலிசார் வடபகுதியில் இருந்து வந்து வீடுகளில் தங்கியிருந்த ஆறுபேரை சந்தேகத்தின் பேரில கைது செய்துள்ளனர்

இவர்கள் ஒருசில நாள்களுக்கு முன்னரே வடபகுதியில் இருந்து நீர்கொழும்பிற்கு வந்து வீடுகளில் தங்கியிருந்தவர்கள் எனத் தெரியவருகிறது.

இதேவேளையில் சீதுவைப் ...

வர் கைது செய்யப்பட்டுள்ளார் இவர் ஜே. வி. பி. இயக்கத்துடன் தொடர்புடையவர் என பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

## சவளக்கடையில் கைவிடப்பட்ட வீடுகளில்

# உருக்குலைந்த நிலையில்

## திருமலையில் சுற்றிவளைப்பு 40 பொதுமக்கள் கைது

திருக்கோணமலை மாவட் ...

னன்று சிறிலங்கா இராணுவத் ...

மாணவர்களும் அடங்குவர்.



பதவியா பராக்கிரமபுரப் பகுதியில் அமைந்திருந்த கோங்வேவ மினி முகாம் கடந்த வியாழனன்று நள்ளிரவு விடுதலைப் புலிகள் நடாத்திய அதிரடித் தாக்குதலின் போது கைப்பற்றப்பட்டது. அம்முகாமிலிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களையே படத்தில் காண்கின்றீர்கள்.

வடக்கிலும், கிழக்கிலும் புலிகள் மேற் கொண்டுவரும் அதிரடித் தாக்குதல்கள் பெரும், உயிர், மற்றும் இராணுவதள

வருகின்றமை தெரிந்ததே இத் தாக்குதல்களினால், பெரிதும் மனவுறுதி தளர்ந்து போயுள்ளது இராணுவத்தினர் எதிர்

சாத்தியமாகாத ஒன்று என சிந்திக்கத் தலைப்பட்டுள்ளதாகவும் கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந் நிலையில், இழப்புக்கள் தொடர்ந்தும அதிகரித்துச் செல்வதனால், இராணுவத் தோல்விகள், இழப்புக்கள் பற்றி இருட்டடிப்பு செய்வதில் அரசு அக்கறை காட்டத் தொடங்கியுள்ளது. இதன் பிரகாரம், இராணுவ இழப்புக்

பிழையான தகவல்களை வழங்குதல், அரசகட்டுப்பாட்டிலுள்ள மக்கள் தொடர்பு சாதனங்களில் செய்திகளை வெளியிடாமல் மறைத்தல் போன்றவற்றில் கவனம் செலுத்தி வருகின்றது.

இந்த வகையில், கட்டைக் காட்டில், ஏற்பட்டமோதலை சிறிய தாக்குதல் சம்பவம் எனக் காட்ட முற்பட்டுள்ளது. இதில், இராணுவத்தினருக்கு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## 6 வட பகுதி இளைஞர்கள் நீர்கொழும்பில் கைது

(கொழும்பு)

நீர்கொழும்பு நகரப் பகுதியில் உள்ள வீடுகளை சோதனை நடத்திய பொலிசார் வடபகுதியில் இருந்து வந்து வீடுகளில் தங்கியிருந்த ஆறுபேரை சந்தேகத்தின் பேரில கைது செய்துள்ளனர்

இவர்கள் ஒருசில நாள்களுக்கு முன்னரே வடபகுதியில் இருந்து நீர்கொழும்பிற்கு வந்து வீடுகளில் தங்கியிருந்தவர்கள் எனத் தெரியவருகிறது.

இதேவேளையில் சீதுவைப் பகுதியில் வைத்து உள்ளூரில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டுப் பாக்கியுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் இவர் ஜே. வி. பி. இயக்கத்துடன் தொடர்புடையவர் என பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

## சவளக்கடையில் கைவிடப்பட்ட வீடுகளில்

# உருக்குலைந்த நிலையில் 75 தமிழரின் எலும்புக்கூடுகள்

சம்மாந்துறை தொகுதயில் சவளக்கடை கிராமப் பகுதியிலுள்ள பாழடைந்த சில வீடுகளில் அரைகுறையாக எரிந்து உருக்குலைந்த நிலையில் தமிழர்களது எழுபத்தைந்துக்கு மேற்பட்ட எலும்புக்கூடுகள் இருந்ததாக அவ்வீடுகளைப் பார்த்துவரச்சென்ற அப்பகுதி தமிழ் மக்கள் தெரிவித்துள்ளனர்.

அப்பகுதியில் வாழ்ந்த அக் கிராம மக்கள் இதுவரைமீளக் குடியேறவில்லை வீடுகள் யாவும் பாழடைந்தே கிடக்கின்றன சிலர் தமதுவீடுகளை பார்வையிடச் சென்றபோதே எரிந்து உருக்குலைந்த நிலையில் எலும்புக்கூடுகள் வீடுகளுக்குள் கிடந்ததாகத் தெரிவிக்கின்றனர்

இந்த எலும்புக்கூடுகளைக் கண்ட மக்கள் மறுநாள் இன்னும் பலருடன் சென்று பார்த்தபோது அவைகள் அங்கு காணப்படவில்லை எனத் தெரிவித்துள்ளனர்

இச்சம்பவத்தின் பின்னர் அப்பகுதியில்காணாமல்போன தமிழர்களின் உறவினர்கள் பீதியும், கவலையும் அடைந்துள்ளனர்.

## தலைமைப்பதவிக்கு அனுரா சிறிமாவிற்கு விருப்பமாம்

[கொழும்பு]

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தமது மகன் அனுராவுக்கு இடமளிக்கும் முகமாக தலைமைப் பதவியைத் துறக்க முடிவு செய்திருப்பதாகத்தெரியவருகிறது

கடந்த புதனன்று தமது றோஸ்மீட் பிளேஸ் இல்லத்தில் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்த திருமதி சிறிமாவோ தமது விருப்பத்தை தெரிவித்ததாகவும் தெரிய வருகிறது

எனினும் மேல்மாகாணத்தைச் சார்ந்த மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் திருமதிசிறிமாவோ தமதுமுடிவை மீள் பரிசீலனை செய்யும்படி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மாகாண சபைத் திட்டம் தோல்வி அடைந்து விட்டது

— தினேஷ் குணவர்த்தனா

மாகாண சபைத் திட்டம் தோல்வி கண்டு விட்டதாகக் கூறி, அதிகாரப் பரவலாக்கலிறகான மற்றுமொரு திட்டத்தை மக்கள் ஐக்கிய முன்னணி முன்வைத்து உள்ளது

தமது கட்சி ஒரு திட்டத்தை முன்வைத்துள்ளதாகவும், பாராளுமன்றத்தில் உள்ள அரசியல் கட்சிகளின் ஆதரவை நாடி நிற்பதாகவும் கூறிய மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா இந்த யோசனைகள் பற்றிய விளக்கங்கள் இனிமேல் தயாரிக்கப்பட இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

மாகாணசபைத் திட்டம் ஒரு முழுதோல்வி என்று வர்ணித்த அவர் அதன் மூலம் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு ஒரு தீர்வு முன்வைக்கப்பட்டதாயினும் அது பலத்த அழிவைத் தந்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்; ஐ. தே. க சிறிலங்கா சு. க. போன்ற தேசியக்கட்சிகளோடு ஒப்பிடும் இடத்தில் வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்துள்ளது சமது கட்சி மட்டுமே என்று கூறியதுடன், ஐ. தே. க.யும சுதந்திரக்கட்சியும் தத்தமது தீர்வுத்திட்டத்தை முன்வைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்

## பிரேமா பூட்டான் சென்றார்

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று பூட்டான் புறப்பட்டார் இந்திய விமானப்படைக்குச் சொந்தமான விமானமொன்றில் இவர் பூட்டானுக்குப் புறப்பட்டுச் சென்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## வாழைச்சேனையில் கெடுபிடி அதிகரிப்பு

வாழைச்சேனைப் பகுதிகளில் தறபோது பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது

வெளிக் கிராமங்களில் இருந்து வாழைச்சேனைக்குள் நுழைபவர்கள் பலத்த சோதனைககு உட்படுத்தப்படுகின்றனர் பழைய நெல் களஞ்சியத்திற்கு அருகாமையிலும் பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையிலும் சோதனைகள் நடாத்தப்படுகின்றன என்றும்,

காகித ஆலைக்குச் செல்லும் வாகனங்கள் சோதனைக்குள்ளாக்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## மன்னார் மாவட்டத்தில்

## நடவடிக்கை பூர்த்தியாம் ஊரடங்கும் நீக்கம்

(கொழும்பு)

மன்னார் தீவுக்கு கிழக்கே கடந்த நான்கு நாள்களாக மேற்கொள்ளப்பட்ட வேகஅதிரடி இராணுவ நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ளதாக சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா படையினர் சிலாவத்துறையிலுள்ள முகாம்களுக்குத் திரும்பிவிட்டனர் என்று அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்தினாவின் வழிகாட்டலுக்கு

(4ஆம் பக்கம் பார்க்க)

# திருமலையில் சுற்றிவளைப்பு 40 பொதுமக்கள் கைது

திருக்கோணமலை மாவட்டம் மூதூர், சேனையூர், கட்டைபறிச்சான், கடற்கரைச் சேனை கிரேவல்குழி ஆகிய இடங்களை கடந்த வியாழனன்று சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றி வளைத்து பல பொதுமக்களைக் கைது செய்துள்ளனர்

அன்று அதிகாலை 3.00மணியளவில் இப்பகுதிகளைச் சுற்றி வளைத்து ஆண்களும், பெண்களுமாக 40 பொதுமக்களைக் கைது செய்து ஜி பி. எஸ். இராணுவ முகாமிற்கு கொண்டு சென்றுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் திருமணமானவர்களும், மாணவர்களும் அடங்குவர்.

கட்டைபறிச்சானைச் சேர்ந்தவர்களான செல்லத்துரை கனகராசா (வயது 40), சரவணமுத்து குணநாயகம் (வயது 39), நல்லலிங்கம் கணபதிப்பிள்ளை (வயது 49), சிதிரவேல் உதயகுமார் (வயது 37), இராசரத்தினம் கோபிதரன் (23), கனகசபை கோகுலதாஸ்(20), காங்கேசப்பிள்ளை நவஜோதி (28),

[4ஆம் பக்கம் பார்க்க]

## குடியிருப்புக்கள் மீது இராணுவம் எறிகணை வீச்சு

[யாழ்ப்பாணம்]

பொதுமக்களின் குடியிருப்புக்களை நோக்கி சிறிலங்கா இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். காரைநகரில் இருந்து பொன்னாலை, மூளாய் ஆகிய பகுதிகளை நோக்கி நேற்றுக் காலையும், நண்பகலும் தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

அதேவேளை நேற்று முன்தினம் ஏழாலைப் பகுதியை நோக்கி பலாலியில் இருந்து எறிகணைத்தாக்குதல் நடாத்தப்பட்டது.

அத்துடன் நள்ளிரவுவேளை

[4 ஆம் பக்கம் பார்க்க]

# மன்னார் மாவட்டத்தில் 10,000 மக்கள் இடம்பெயர்வு

(மன்னார்)

மன்னார்மாவட்டம் நானாட்டான், அடம்பன், பள்ளமடு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 2,000 இற்கு மேற்பட்ட குடும்பங்களைசேர்ந்த 10 000 இற்கு மேற்பட்ட மக்கள் அண்மைய இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்துள்ளனர்.

இவ்வாறு இடம்பெயர்ந்த மக்கள் மடு அகதி முகாம், கட்டை அடம்பன் பெரியமடு, கோவில்குளம், குருவில்வான் ஆகிய இடங்களில் மிகவும் சிரமத்தின் மத்தியில் தங்கியுள்ளனர் தற்போது பெய்துவரும் கடும் மழையினால் இம்மக்கள் பெரும் துன்பத்துக்கு உள்ளாகியுள்ளனர்

தமது இருப்பிடங்களை விட்டு வெறுங்கையுடன் வெளியேறிய மக்கள் காடுகளிலும் தஞ்சமடைந்துள்ளனர். பாடசாலைகள் எதுவும இயங்கவில்லை.

இடம்பெயர்ந்த இம்மக்களுக்கு உதவி அரசாங்க அதிபர்கள், அத்தியாவசிய சேவைக் குழு, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் உதவியுடன் உணவு விநியோகம் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.


ஈழநாதம் இதழின்

**விளம்பரப் பணிமனை**

சாவகச்சேரி நகரின் மத்தியில்

வரும் திங்கள் முதல் ஆரம்பம்

உங்கள் அபிமானத்தைப் பெற்ற ஈழநாதம் மக்கள் தினசரியில் நீங்கள் விளம்பரங்கள் தருவதற்கு வசதியாக எங்கள் பணிமனை வரும் திங்கள் முதல் இயங்கும்.

தொடர்புகளுக்கு:

**திருக்கணித அச்சகம்**

கச்சாய் வீதி,

சாவகச்சேரி.


**இயற்கை வளம் எங்கள் செல்வம்-அதை இயன்றவரை பேணுவோம் வாரீர்**

## வரி விளம்பரம்

### மனைப் பொருளியல்

மனைப் பொருளியல் மாதிரிகை வினா-விடை (ஆண்டு 10—11) வெளிவந்துவிட்டது. பரீட்சையில் அதிசிறந்த பெறுபேற்றைப்பெற உதவும் வழிகாட்டி. ஆக்கம்: செல்வி யசோதா துரைசிங்கம். எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (3308)

### தவறிவிட்டது

யாழ்ப்பாணம், 211/1, கோவில் வீதியைச் சேர்ந்த ச. உதயகுமார் அவர்களின் அடையாள அட்டை இருபாலைக்கும் நல்லூருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைக்கவும். இல. 315410305V (3307)

### ஆண்டு 6 அநுமதித் தேர்வு

ஆண்டு 5-ல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு பிரபல பாடசாலைகளுக்கான மாதிரி அநுமதிப் பரீட்சை (தமிழ், கணிதம், ஆங்கிலம்) 04-10-92 ஞாயிறு மு. ப. 8-00, மு. ப. 11-00 நடைபெறும். வெளி மாணவரும் தோற்றலாம். புதிய கல்வி நிலையம், 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (3304)

### கடிகாரமா ? றேடியோவா ?

உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள். சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு. எமக்கு வேறு கிளைகள் கிடையாது. டில்கா வாச்வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். (சி-5152)

### பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

மேசி சுசிகலா குணரெத்திணம் என்பவரின் அடையாள அட்டை வீதியில் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதை உரியவர் வந்து பெற்றுக் கொள்ளவும்.

தமிழ்நாட்டிலிருந்து அகதிகளை அனுப்பும்

## அடுத்தகட்டம் ஜனவரியில் 80,000 பேர் திரும்புவர்

[கொழும்பு]

அடுத்தகட்டமாக தமிழகத்திலிருந்து தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பும் வேலைகள் எதிர்வரும் ஜனவரிமாதத்தில் மீண்டும் தொடங்கப்படும் எனவும் இந்த இரண்டாவது கட்டத்தில் சுமார் 80,000 அகதிகள் திருப்பி அனுப்பப்படுவர் என்றும், புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் கிறிஸ்டி. சில்வா கூறியுள்ளார்.

விசாத் தரகர்களான

## யாழ். இளைஞர்கள் இருவர் பொலிசாரால் கைது

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கான விசாக்கள் பெற்றுக் கொடுப்பதில் தரகர்களாகச் செயற்பட்ட இரு தமிழ் இளைஞர்கள் வெள்ளவத்தையில் வைத்துப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இந்த இருவரும் இவ்வருட ஆரம்பத்தில் கொழும்பு வந்ததாகவும், இவர்களில் ஒருவர் வல்வெட்டித்துறையையும், மற்றவர் சுன்னாகத்தையும் சேர்ந்தவர்எனவும் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

பல மேற்குநாடுகளின் தூதுவரகங்களோடும் தொடர்புடைய இவர்கள், வடபகுதியைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே விசாக்கள்பெற்றுவழங்கி வந்ததாகவும் தெரியவருகிறது

## இலங்கையில்ஓர்இலட்சம்பேர் வேலையின்றியுள்ளனர்

(கொழும்பு)

இலங்கையில்சுமார் ஓர் இலட்சம்இளைஞர்கள் வேலைவாய்ப்புஅற்றிருப்பதாக புள்ளி விபரங்கள் மூலம்தெரியவருகிறது.

சிறிலங்காவில் மனித வள அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கம் ஒன்றில் பேசிய பேராசிரியர் வல்லி மென்டிஸ் மேலும் கூறுகையில்; க.பொ.த (சா/தரம்) மற்றும் உயர்தரப்பரீட்சைகளில் சித்திபெற்ற பெருமளவானோர் வேலை இன்மையால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும்,வேலையற்ற பலரில் ஏழாயிரத்து நானூற்றிருபத்ஐந்து பட்டதாரிகளும் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

## கூறுவிலை கோரல்

### நவீன கள்ளுச்சாலை அமைத்தல்

மேற்படி கள்ளுச்சாலை ஒன்றை அமைப்பது தொடர்பில் கூறுவிலை ஒன்றை கட்டட தொழில் நிறுவனங்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றோம். கட்டட வடிவமைப்புகளை இல. 499 காங்கேசன்துறை வீதியில் உள்ள வடமாகாண தெ. ப, பொ. கூ. ச. சமாச அலுவலகத்தில் பார்வையிடலாம். விண்ணப்ப முடிவு திகதி 10 - 10 - 1992 ஆகும்.

பொதுமுகாமையாளர்,
வடமாகாண தெ ப பொ. கூ ச சமாசம்,
இல. 499, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(சி/ 5157 )

இதோ வெளிவந்து வேகமாக விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன

## சீவம் இன்டஸ்றீஸாரின்

நவீன தீபாவளி வாழ்த்து மடல்கள்

**விலை விபரம்**

| | | | |
|---|---|---|---|
| No 1 | கட்டிங் காட் | 100க்கு | 1200.00 |
| No. 2 | போஸ் காட் 10x7 | 100க்கு | 1000.00 |
| No. 3 | பேப்பர் காட் 10x7 | 100க்கு | 600.00 |
| No. 3 | கட்டிங் காட் | 100க்கு | 750.00 |
| No. 4 | போஸ் காட் 7x5 | ,, | 550.00 |
| No. 5 | கட்டிங் காட் | ,, | 500.00 |
| | பெரிய போஸ் காட் சினிமா | ,, | 200.00 |
| | சுவாமி போஸ் காட் | ,, | 110.00 |

தமிழ் மலர், சிறுவர் தமிழ் மலர், தமிழ் வாசகம் Essy ABC, நீதிகதைகள் I, II, தற்போதைய சூழ்நிலை காரணமாக எமது வெளியீடுகளை பின்வரும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.


மக்மிலன் புத்தகசாலை,
இல: 3 பஸ் நிலையம் யாழ்ப்பாணம்,
நல்லூர்.

(போட்டோ பிரதிகளுக்கும் நாடவேண்டிய இடம்)

(சி-5161)

## கண்ணீர் அஞ்சலி

வீரஜனனம் 26 | 09 | 1971



வீரச்சாவு 01 | 1 | 1992

### கப்டன் அத்தி

(கணபதிப்பிள்ளை விஜயசேனன்)

ஸ்கந்தபுரம் - கிளிநொச்சி


01-10-1992 அன்று பதவியா கோங்வேவவில் நடைபெற்ற மினி முகாம் தகர்ப்பின் போது கப்டன் அத்தி (கணபதிப்பிள்ளை விஜயசேனன்)வீரச்சாவு அடைந்தார். இவருக்கும் இவருடன் வீரச்சாவடைந்த ஏனையோர்க்கும் எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்தி ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

வேலணை கிழக்கு,
வேலணை.

திரு. கண்ணையா மாமா
குடும்பத்தினர், உற்றார், உறவினர்
முத்து வீதி,
உரும்பராய் தெற்கு

(3312)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### லெப். றூபால்

[வேலாயுதம் சிறிகுமார்]

தாயின் மடியில் தவழ்ந்த போது - உன்
பூ முகம் பார்த்து மகிழ்ந்தோம்
தாயக விடிவில் உயிர்தந்த போது
தெய்வமெனப் போற்றுகிறோம்

நாயன்மார்கட்டு சனசமூகநிலைய
நண்பர்கள்

(சி-5162)

## ஓராண்டு நினைவலைகள்

வீரஜனனம் 8 – 03 – 1974



வீரச்சாவு 16 – 10 – 1991

வரலாற்றுப்பெருமை வாய்ந்த மணலாற்றுச்சமரின் போது 16-10-1991இல் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட

### 2-ம்லெப்டினன்ட் கோபி

[கனகரத்தினம் - சிவகுமார்]

திதி: 4-10-1992

ஈரெட்டு பதினாறு வயதினிலே
ஈழத்தாயின் விடிவிற்காய்,
போர்க்கோலம் பூண்டவனே!
போராடிப் புலியாகிப் போனவனே
பெற்ற தாயை விட பிறந்த பொன்நாடே பெரிதென்று
பேரினவாத பூதங்களை அடக்க நினைத்தாயடா-சிங்களர்
நெறி தவறிய போதும் நேர்மைக்கு மாறாது நேருக்கு
நேர் நின்று போராடிய புலி வீரனே!

மானியூர் மண்ணில் பிறந்து
மணலாற்று மண்ணில் - வீரகாவியம் படைத்துச்
சென்றவனே

காலங்கள் மறைந்திடினும் - உன்
காவியம் மறையாதையா!

## உங்களுக்குகந்த வகையில்............

எம்மிடம் உண்டு. எமக்கு வேறு கிளைகள் கிடையாது.
டில்கா வாச்வேக்ஸ் 284,
ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்)
யாழ்ப்பாணம். (சி-5152)

---

### பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

மேசி சுசிகலா குணரெத்தினம் என்பவரின் அடையாள அட்டை வீதியில் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதை உரியவர் வந்து பெற்றுக் கொள்ளவும்.

---

### அமைத்தல்

மேற்படி கள்ளுச்சாலை ஒன்றை அமைப்பது தொடர்பில் கூறுவிலை ஒன்றை கட்டட தொழில் நிறுவனங்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றோம். கட்டட வடிவமைப்புகளை இல. 499 காங்கேசன்துறை வீதியில் உள்ள வடமாகாண தெ. ப, பொ. கூ. ச. சமாச அலுவலகத்தில் பார்வையிடலாம். விண்ணப்ப முடிவு திகதி 10 - 10 - 1992 ஆகும்.

பொதுமுகாமையாளர்,
வடமாகாண தெ ப பொ. கூ ச சமாசம்,
இல 499, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

( சி/ 5157 )

---

### (கணபதிப்பிள்ளை விஜயசேனன்)

ஸ்கந்தபுரம் - கிளிநொச்சி

01-10-1992 அன்று பதவியா கோங்வேவவில் நடைபெற்ற மினி முகாம் தகர்ப்பின் போது கப்டன் அத்தி (கணபதிப்பிள்ளை விஜயசேனன்) வீரச்சாவு அடைந்தார். இவருக்கும் இவருடன் வீரச்சாவடைந்த ஏனையோர்க்கும் எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்தி ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

வேலணை கிழக்கு,
வேலணை.

திரு. கன்னையா மாமா
குடும்பத்தினர், உற்றார், உறவினர்
முத்து வீதி,
உரும்பராய் தெற்கு

(3312)

---



வரலாற்றுப்பெருமை வாய்ந்த மணலாற்றுச்சமரின் போது 16-10-1991இல் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட

## 2-ம் லெப்டினன்ட் கோபி

### [கனகரத்தினம் - சிவகுமார்]

### திதி: 4-10-1992

ஈரெட்டு பதினாறு வயதினிலே
ஈழத்தாயின் விடிவிற்காய்,
போர்க்கோலம் பூண்டவனே!
போராடிப் புலியாகிப் போனவனே
பெற்ற தாயை விட பிறந்த பொன்நாடே பெரிதென்று
பேரினவாத பூதங்களை அடக்க நினைத்தாயடா-சிங்களர்
நெறி தவறிய போதும் நேர்மைக்கு மாறாது நேருக்கு
நேர் நின்று போராடிய புலி வீரனே!

மானியூர் மண்ணில் பிறந்து
மணலாற்று மண்ணில் - வீரகாவியம் படைத்துச்
சென்றவனே

காலங்கள் மறைத்திடினும் - உன்
காவியம் மறையாதையா!

இதே நாளில் இவருடன் வீரச்சாவை எய்திய சகல போராளிகளுக்கும் எமது அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

உன் பிரிவால் துயருறும்
அம்மா, அப்பா, சகோதரர்கள்,
அத்தான்மார், அண்ணிமார்,
உறவினர்கள், நண்பர்கள்.

மானிப்பாய் மேற்கு,
மானிப்பாய்.

(3309)

---


## உங்களுக்குகந்த வகையில்............

### எம்மிடம் சிறந்த தரமான நம்பிக்கைக்குகந்த

# நாட்டரிசி - பச்சை அரிசி - சம்பா அரிசி

### அனைத்தும் உடனுக்குடன் உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளவும்

## தரமான நெல் நியாய விலையில் விற்பனவு செய்யவும் உகந்த இடம் இணுவிலில்

# ஐங்கரன் அரிசி ஆலை

### இணுவில்

(சி-5159)


---

## நினைவு கூருகின்றோம்...

## 1992 - 10 - 04

1988 ஆம் ஆண்டு இதே தினத்தில் அம்பாறை - கல்முனைப் பகுதியில் எமது முகாமொன்றின் மீது இந்தியப் படையினர் மேற்கொண்ட முற்றுகையின்போது வீரச்சாவெய்திய -

**வெங்கட்**

யாழ் - தொண்டமானாறு கெருடாவில் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப் பற்றாளர்களான (தந்தை -மகன்) -

**வேலுப்பிள்ளை செல்லக்கண்டு**

**செல்லக்கண்டு சோதிலிங்கம்**

இதே சம்பவத்தின்போது வெட்டிக் கொல்லப்பட்ட திருபதி இராசமுத்து செல்லக்கண்டு.

வவுனியாவில் இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட சாளம்பைக குளத்தைச் சேர்ந்த தமிழ்இளைஞன்.

யாழ். மத்திய பேரூந்து நிலையம், யாழ் பூனாறி மரத்தடிப் பகுதிகளில இந்திய படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது விழுப்புண் அடைந்திருந்து மருத்துவமனையில் வீரச்சாவெய்திய -

**கப்டன் தேவன்** (சிவலிங்கம் தமிழ்வாணன் - அப்துல்காசன் வீதி, மூதூர், திருக்கோணமலை)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி/5158)

**சிந்தனைக்கு**

ஜனநாயகம் என்பது தலைகளை எண்ணிக் கொண்டு முடிவு மேற்கொள்வது அல்ல.

# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்-04- 10- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## சிறிலங்காவின் ஜனநாயகர்

விடுதலைப் புலிகள் அமைப்புடன் தனது அரசு இப்பொழுது எந்தவித பேச்சு வார்த்தையிலும் ஈடுபடவில்லை எனவும், ஜனநாயக வழியில் இணைந்து கொள்ளத் தயாராக இருந்தமையினாலேயே முன்பு பேச்சு வார்த்தை நடத்தியதாகவும் சிறிலங்கா ஜனாதிபதி டில்லியில் பத்திரிகையாளர் மத்தியில் பேசும்போது தெரிவித்துள்ளார்

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா குறிப்பிட்டதுபோல் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்து. பேச்சு வார்த்தை மூலம் இனப் பிரச்சினைக்கு அதாவது 'ஜனநாயக வழியில்' தீர்வு காணத் தயாராக இருந்தனர் என்பது ஏற்புடையதுதான்.

ஆனால் பேச்சு வார்த்தை, ஜனநாயக வழி என்பன சிறிலங்கா அரசாங்கத்தின் பார்வையில் என்ன என்ற கேள்வி எழுந்தபோதே பேச்சுவார்த்தைகள் குழம்பின முரண்பாடுகள் எழுந்தன. இனப் பிரச்சினைக்குப்பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண விடுதலைப் புலிகள் முன்வந்த வேளையிலும் சிறிலங்காதனது இராணுவவிரிவாக்கத்தையோ அன்றி தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்கும் சிங்களக் குடியேற்றங்களையோ நிறுத்தவில்லை.

அத்தோடு, தமிழரின் அடிப்படை உரிமைகளை மறுத்த ஆறாவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை நீக்கி ஜனநாயக அரசியலில் ஈடுபடுவதற்கு சிறிலங்கா அரசாங்கம் வாய்ப்பளிக்கவும் இல்லை ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்கக் கோரி ஈரோஸ் எம். பி. க்கள் பதவி விலகியபோதும், விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையின்போது வற்புறுத்திய போதும் சிங்கள அரசு அதற்குத் தயாராக இருக்கவில்லை.

அதாவது, சிங்கள ஆட்சியாளர்களின் 'ஜனநாயகம்' என்பது பெரிய இனத்தின் ஆட்சி, அவர்களின் நலம் என்பதாக மட்டும் இருந்ததே ஒழிய சிறுபான்மை தேசிய இனங்கள் உரிமை அன்றி அவர்களின் பாதுகாப்பு என்பன குறித்து எதுவித அக்கறையும் கொண்டதாக இருக்கவில்லை. சிங்களவரின் அரசியல் சித்தாந்தத்தில் பெரும்பான்மையான சிங்களவர் 'ஜனநாயக ரீதியில்' தேர்ந்தெடுக்கப் படுகின்றார்கள். ஆளுகின்றார்கள். சிறுபான்மை இனம் அவர்களுக்குக் கட்டுப்பட்டு அவர்களுடைய ஆட்சியை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதேயாகும்.

## யாழ்ப்பாணம் மீது படைஎடுத்தால் அது கடுமையான போராக இருக்கும்

**- யோகி**

யாழ். குடா நாட்டின் மீது சிங்களப்படை பெரியளவில் ஒரு தாக்குதலை நடாத்துவதாக இருந்தால் நாம் பெரிய அளவிலே எதிர்ப்புக் கொடுப்போம். நாம் கடுமையான ஒரு போராட்டத்தை நடத்துவோம் அது மிகப் பெரிய கடுமையான ஒரு போராட்டமாகத்தான் இருக்கும். இவ்வாறு பி பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் திரு. யோகரெட்ணம் யோகி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மீது சிறிலங்காஇராணுவம் படை.எடுப்பு ஒன்றை மேற்கொண்டால் புலிப்படையினர் என்ன செய்வார்கள் என பி.பி ஸி செய்தியாளர் கேட்டபோது மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

நாங்கள் தமிழ் ஈழத்தில் மிகப் பெரும்பாலான பகுதிகளில் இராணுவத்துக்கு மிகப் பெரிய இழபபை ஏற்படுத்தியிருக்கிறோம். யாழ் குடா நாட்டைப் பொறுத்தவரையில் நாங்கள் கூட மிகப் பெரிய அளவில் இராணுவத்துக்கு இழப்பு ஏற்படக் கூடிய தாக்குதலை நடத்தியிருக்கிறோம்.

இராணுவம் வடபுலத்தில் முன்னேறி வருவது பற்றியும், புலிப்படையினர் ஒவ்வொரு பகுதியிலும் நடந்தி வரும தாக்குதல் பற்றியும் பி.பி.ஸி. முகவர் யோகியைக் கேட்ட போது-

யாழ் குடாநாட்டைப் பொறுத்தவரையிலே இராணுவம் நான்கு மாதமாக யாழ். குடாநாட்டைக் கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் செயற்பட்டு வருகிறது. நாங்கள் என்ன மாதிரித் தாக்குவது என்று கொள்ளாமல், எங்களுக்குச் சாதகம் என்ற இடங்களில் தாக்குவோம். எமக்கு மிகப் பெரிய இழப்புகள் வருகிற இடங்களிலே சண்டையைத் தவிர்த்துக் கொள்கிறோம். எங்களுக்குச் சாதகமான இடங்களிலே தாக்குதல்களை நடத்திக் கொண்டுதான் நாங்கள் வந்திருக்கிறோம். எங்கள் தாக்குதல்களைப் பார்க்கும் போது கூட ஒட்டு மொத்தமாகத் தமிழ் ஈழத்தைப் பார்க்க வேண்டும்.

அரசு விதித்துள்ள பொருளாதாரத்தடை மக்களை வெகுவாகப் பாதித்திருக்கிறது மக்கள் மண்ணெண்ணைக்காக வரிசையில் நிற்கிறார்கள் பெற்றோல் இல்லை. மின் சக்தி இல்லை இப்பேற்பட்ட நிலைமைவிடுதலைப்போராட்டத்தைப் பாதிக்கவில்லையா என்று பி.பி.சி. முகவர் சியாக்சோ நோஸ் கேட்ட போது-

இந்த சிங்கள அரசு விதித்துள்ள பொருளாதாரத்தடை எங்கள் விடுதலை அமைப்பை ஓரளவில் பாதித்திருக்கிறது என்பது உண்மைதான் பொருளாதாரத் தடை மக்களைப் பெரிதளவில் பாதிப்புக்குள்ளாக்கி இருக்கிறது இந்தப் பொருளாதாரத் தடை மூலம் ஒரு மறை முகமான இனப் படுகொலையை மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது.

என்னைப்போல ஆயிரக்கணக்கான பேர் யாழ்ப்பாணத்துக்கு வருவதற்கு எத்தனையோ கஷ்டமான பயணத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது ஆனையிறவு திறக்கப்பட்டால் இந்தப் பயணம் எவ்வளவுசுலபமாக இருக்கும். ஆனையிறவைத் திறந்து விடுவதற்குத் தாங்கள் தயார் என்று இலங்கை அரசும் இராணுவமும் கூறுகிறது ஆனையிறவின் இரு பக்கங்களையும் திறந்து விடுவதற்கு ஏன் விடுதலைப் புலிகள் தயாராக இல்லை என வினவியதற்கு-

ஆனையிறவுப் பாதையைத் திறந்து விடுவதில் எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபமும் இல்லை ஆனால் சிங்களப் படையைப் பொறுத்த வரையில் அதை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொண்டு, நாங்கள் கண்ணிவெடிகளை அகற்றிய பிறகு அதற்கூடாக வந்து யாழ்குடா நாட்டைக்கைப்பற்றுவதற்கு முயற்சிக்கலாம் சிங்கள அரசைப் பொறுத்த வரைக்கும், சிங்களப் படையைப் பொறுத்த வரைக்கும் தாங்கள் அதைச் சாதகமாகப்பயன்படுத்திக் கொண்டு,யாழ்குடா நாட்டின் மீதுஒரு தாக்குதலை நடத்துவதற்காக அதனைப் பயன்படுத்த மாட்டோம் என்று உறுதி தருவதாக இருந்தால் நாங்கள் அதைத்திறந்து விடுவது பற்றிக்கருத்தில்எடுத்துக்கொள்ளலாம் எனப் பதிலளித்தார்.

மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ அவர்கள் நிலக்கண்ணி வெடித்ததில் கொல்லப்பட்டார்.இதனைப் பற்றி புலனாய்வு செய்த இராணுவம் இது உங்களால்முந்திவைக்கப்பட்ட நிலக்கண்ணி என்று கூறுகின்றது. இந்தச் சம்பவம் பற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள் எனக்கேட்டதற்கு-

கொப்பே கடுவ கொல்லப்பட்ட கண்ணிவெடி அண்மைக் காலத்தில் வைக்கப்பட்ட கண்ணிவெடி.சிங்களப் படைகளாலும் சரி அல்லது குழுக்களாலும் சரி நாங்கள் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்ததென்பதை ஒத்துக்கொள்ள விரும்பவில்லை. நாங்கள்அங்கு போய் நின்று வேவுபார்த்து கையால் வைத்தகண்ணிவெடியில் தான் அவர் சிக்கிக் கொண்டார்.நாங்கள்அண்மையில் பூநரிப் பகுதியில் ஒரு பெரிய தாக்குதல் நடத்தினோம்.நாங்கள் போகாவிடில் அந்தக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஒரு பெரிய தாக்குதல் நடத்தியிருக்கமுடியாது.இவ்வகையில்தான் நாங்கள் அப்பகுதியில் வேவுபார்த்து நாங்கள் வைத்த கண்ணிவெடியில் சிக்கித்தான் கொப்பேகடுவவும் மற்றவர்களும் இறந்தார்கள் என்றும் தெரிவித்தார்.

## இல. துரதிஷ்ட நிலையை போக்கவே நாம் களத்தில் குதித்தோம்

**- காமினி திசநாயக்கா**

(காலி)

''இன்று வடக்கு -- கிழக்கு முடிந்து விட்டது. அரசாங்கத்தின் வங்கிகளும் முடிந்துவிட்டன அரசாங்கத்தின் தோட்டங்களும் விற்கப்பட்டு விட்டன. இலங்கையும் விற்கப்படும் என இங்கிலாந்திலோ அல்லது வேறு நாட்டிலோ விளம்பரம் வெளியிட்டாலும் வெளியிடுவார்கள். இத்தகு துரதிஷ்டநிலையைபோக்கவே நாம் களத்தில் இறங்கியுள்ளோம்,''

இவ்வாறு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் பிரசாரக் கூட்டம் காலி மாவட்டத்தில் நெலுவை எனும் இடத்தில் நடைபெற்றபோது முன்னணியின் தலைவர்களுள் ஒருவரான முன்னாள் அமைச்சர் காமினி திசநாயக்கா தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; இந்த நாட்டில்வவுனியாவுக்கு அப்பால் பிரபாகரனின் இராச்சியம், மலையகத்திலோ, வேறொரு இராச்சியம் தெற்கிலோ, பயங்கரவாதம் சூழ்ந்துள்ளது எனத் தெரிவித்தார்.

மேலும் ஐ தே க. மேடைகளில் ஐ. தே. க. அமைச்சர்கள் பேசுவதற்கு ஐந்து நிமிடமே ஒதுக்கப்படுகிறது ஆனால் ஒஸீ அபேகுணசேகர பேசுவதற்கு ஒன்றரை மணி நேரம் ஒதுக்கப்படுகின்றது இன்று ஐ தே. க குரல் மங்கி வருவதாகக் குறிப்பிட்டார்.

இக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய ஐக்கியதேசிய முன்னணியின் செயலாளர் ஜீ எம் பிரேமச்சந்திரா உரையாற்றுகையில் இன்றைய ஆட்சியாளர்களினால் வட-கிழக்கு யுத்தத்திற்கு தீர்வு காண முடியாது. இதனாலேயே யுத்தம் வருடக்கணக்கில் நீடித்துக் கொண்டிருக்கிறது.

வடக்கு-யுத்தத்தின் பெயரால் இந்த நாட்டின்மக்களின் எத்தனை ஆயிரம் கோடிரூபாய்கள் அநியாயமாகச் செலவிடப்படுகின்றன? மறுபக்கம் பெரும் வருவாயைத் தரும் தேயிலை, தென்னை, றப்பர் ஆகியவற்றின் வருவாயும் மிகவும் குறைவடைந்து விட்டது எனத்தெரிவித்தார்.

## பொஸ்னியருக்கு உதவாதோரை

## கல்லோயாக்கிராமங்களில் அடிக்கடி சுற்றிவளைப்பு

(அம்பாறை)

கல்லோயா முப்பத்தொன்பதாம் கிராமத்தில் இராணுவத்தினரைக் கண்டதும் அங்கு வசிக்கும் மக்கள் அருகிலுள்ள பகுதிகளுக்கு ஓடி ஒளிந்து கொள்கின்றனர்.

இக் கிராமத்திற்கு அடிக்கடி சோதனைக்கு வரும் இராணுவத்தினர் பலரைக் கைது செய்து கொண்டு செல்வதும் இவர்களுக்கு என்னநேருகிறது என்பது தெரியாமல் போவதுமே மக்களின் அச்சத்திற்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சனியன்று இக் கிராமத்திற்கு திடீரென வந்திறங்கிய இராணுவத்தினர் அங்கு வயோதிபர் மட்டுமே இருந்ததைக் கண்டு ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## பிரதேச செயலர் நியமனம் வடக்கு - கிழக்குக்கு இல்லை

(நமது நிருபர்)

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தின் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் பிரதேசச் செயலாளர்கள் நியமிக்கப்படமாட்டார்கள் அப்பிரதேசங்களில் அதிகாரம் மிகக் குறைவாக வழங்கப்பட்டு உதவிப் பிரதேசச் செயலாளர்கள்தான் நியமிக்கப்பட உள்ளனர் என்று அரசாங்க உயர் அதிகாரி ஒருவர் ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.

அடுத்த ஜனவரி மாதத்தில் ஏனைய பிரதேசங்களுக்கு இப்பதவிக்கு எவரையும் நியமிக்கும் நோக்கம் தற்போதைக்கு அரசாங்கத்திற்கு கிடையாது என்று குறிப்பிட்ட அவர் வவுனியா மாவட்டத்தில் மட்டுமே அந்த ஒரு பிரதேசச் செயலாளர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். செட்டிகுளம், நெடுங்கேணி ஆகிய பகுதிகளுக்கு பிரதேசச் செயலாளர் நியமனம் தற்போதைக்கு இல்லை என்று தெரிவித்தார்.

திருத்தச் சட்டத்தை நீக்கி ஜனநாயக அரசியலில் ஈடுபடுவதற்கு சிறிலங்கா அரசாங்கம் வாய்ப்பளிக்கவும் இல்லை ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்கக் கோரி ஈரோஸ் எம். பி. க்கள் பதவி விலகியபோதும், விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையின்போது வற்புறுத்திய போதும் சிங்கள அரசு அதற்குத் தயாராக இருக்கவில்லை.

அதாவது, சிங்கள ஆட்சியாளர்களின் 'ஜனநாயகம்' என்பது பெரிய இனத்தின் ஆட்சி, அவர்களின் நலம் என்பதாக மட்டும் இருந்ததே ஒழிய சிறுபான்மை தேசிய இனங்கள் உரிமை அன்றி அவர்களின் பாதுகாப்பு என்பன குறித்து எதுவித அக்கறையும் கொண்டதாக இருக்கவில்லை. சிங்களவரின் அரசியல் சித்தாந்தத்தில் பெரும்பான்மையான சிங்களவர் 'ஜனநாயக ரீதியில்' தேர்ந்தெடுக்கப் படுகின்றார்கள். ஆளுகின்றார்கள். சிறுபான்மை இனம் அவர்களுக்குக் கட்டுப்பட்டு அவர்களுடைய ஆட்சியை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதேயாகும்.

திரு. பிரேமதாசா விடுதலைப் புலிகள் 'ஜனநாயக வழிக்குத் திரும்பினால்தான் பேச்சுவார்த்தை என்கிறார். சரி, கடந்த காலத்தை விடுவோம். புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதையும் விட்டுவிடுவோம். ஜனநாயக வழிக்கு திரும்பி விட்டோம் எனக் கூறிக் கொண்டு கொழும்பில் தஞ்சம் கோரியுள்ள தமிழ்க் குழுக்களுடன் பிரேமதாசா அரசாங்கம் நடத்திய பேச்சுவார்த்தைகள் எந்தளவிற்கு முன்னேற்றம் கண்டுள்ளன.

ஒரு தேசிய இனத்தின் அடிப்படையான ஜனநாயக உரிமைகளைக் கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் கோரவில்லை. அவ்அடிப்படை உரிமையை மறுக்கும் ஆறாவது அரசியல் திருத்தச் சட்டத்தை நீக்குமாறும் கோரவில்லை. ஏதாவது போடுங்கள். நாங்கள் அதைப் பற்றி பிடித்துக் கொள்கிறோம் எனக் கெஞ்சி நிற்கும் தமிழ்க்குழுக்களுக்குப் பிச்சை என்ற ரீதியில் கூட எதையும் போடச் சிங்கள அரசாங்கம் தயாராக இல்லை.

இரண்டு வருடங்கள் சர்வகட்சி மாநாடு என தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு வைக்காமல் இழுத்தடித்த அரசாங்கம் தற்பொழுது ஒருவருடத்திற்கும் மேலாகப் பாராளுமன்றத் தெரிவுக்குழு எனப் பிரச்சினையை இழுத்தடிக்கின்றது. தங்கள் அரசியல் வாழ்விற்கு ஒரு சிறு துரும்பையாவது சிங்கள அரசாங்கம் போடுமானால் அதைப் பற்றிக் கொண்டு சிறிது காலமாவது காலம் தள்ளலாம் என எதிர்பார்த்திருந்த தமிழ்க் குழுக்களே இன்று பெரும் ஏமாற்றத்திற்கு உள்ளாகியுள்ளன.

இந்நிலையில், புலிகள் ஆயுதத்தை கீழேவைத்தால்மட்டும் சிங்கள அரசாங்கம் தமிழர்பிரச்சினையை எவ்வாறு தீர்த்து விடப்போகிறது? மாறாக, இதனைச் சாட்டாக வைத்து தமிழர் படுகொலைகளையும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையுமே தீவிரப்படுத்தும். இந்நிலையில் ஆயுதங்களைக் கீழே வைத்தல் என்பது சிங்கள அரசாங்கத்திடம் சரணடைவதாகவே இருக்குமே ஒழிய, ஜனநாயக வழிக்குத்திரும்புவதாக இருக்காது. ஏனெனில், சிறிலங்காவில் எப்பொழுதும் பெரிய இனத்தின் ஆட்சி இருந்து வருகிறதேஒழிய ஜனநாயக ஆட்சி எனக் கூறிக் கொள்ளும் சகல மக்களினதும் அடிப்படை உரிமையைப் பேணும் ஆட்சி இருந்ததில்லை.

டன அரசாங்கத்தின் தோட்டங்களும் விற்கப்பட்டு விட்டன. இலங்கையும் விற்கப்படும் என இங்கிலாந்திலோ அல்லது வேறு நாட்டிலோ விளம்பரம் வெளியிட்டாலும் வெளியிடுவார்கள். இத்தகு துரதிஷ்டநிலையை போக்கவே நாம் களத்தில் இறங்கியுள்ளோம்,''

இவ்வாறு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் பிரசாரக் கூட்டம் காலி மாவட்டத்தில் நெலுவை எனும் இடத்தில் நடைபெற்றபோது முன்னணியின் தலைவர்களுள் ஒருவரான முன்னாள் அமைச்

வுக்கு அப்பால் பிரபாகரனின் இராச்சியம், மலையகத்திலோ, வேறொரு இராச்சியம் தெற்கிலோ, பயங்கரவாதம் சூழ்ந்துள்ளது எனத் தெரிவித்தார்.

மேலும் ஐ. தே. க. மேடைகளில் ஐ. தே. க. அமைச்சர்கள் பேசுவதற்கு ஐந்து நிமிடமே ஒதுக்கப்படுகிறது. ஆனால் ஒஸீ அபேகுணசேகர பேசுவதற்கு ஒன்றரை மணி நேரம் ஒதுக்கப்படுகின்றது. இன்று ஐ. தே. க குரல் மங்கி வருவதாகக் குறிப்பிட்டார்.

இக் கூட்டத்தில் கலந்து

ஆட்சியாளர்களினால் வடக்கு கிழக்கு யுத்தத்திற்கு தீர்வு காண முடியாது. இதனாலேயே யுத்தம் வருடக்கணக்கில் நீடித்துக் கொண்டிருக்கிறது.

வடக்கு-யுத்தத்தின் பெயரால் இந்த நாட்டின்மக்களின் எத்தனை ஆயிரம் கோடி ரூபாய்கள் அநியாயமாகச் செலவிடப்படுகின்றன? மறுபக்கம் பெரும் வருவாயைத் தரும் தேயிலை, தென்னை, றப்பர் ஆகியவற்றின் வருவாயும் மிகவும் குறைவடைந்து விட்டது எனத்தெரிவித்தார்.

# பொஸ்னியருக்கு உதவாதோரை முஸ்லிம் உலகம் மறக்காது

## அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீத்

(கொழும்பு)

துன்பப்படும் நேரத்தில் பொஸ்னியாவின் முஸ்லிம் மக்களுக்கு உதவ முன்வராதோரை முஸ்லிம் உலகம் ஒரு போதும் மறக்காது என்று அமைச்சர் ஏ.சி.எஸ் ஹமீது அண்மையில்நடைபெற்றஉலக முஸ்லிம் பேரவை மாநாட்டில் கலந்துகொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

பல்வேறு நாடுகளையும்சேர்ந்த ஐம்பதிற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்ட உலக முஸ்லிம் மாநாட்டில் கலந்துகொண்ட அவர்மேலும் பேசும்போது. மனித உயிர்களின் பெறுமதி பற்றியும், சர்வதேச சட்டங்கள் குறித்தும், பல்வேறு விளக்கங்கள் கொடுத்துப் பெரிதாகப்பேசிக்கொள்பவர்கள்கூட பொஸ்னியாவில் முஸ்லிம்களின் நிலை குறித்து செவிடர்களாகவும், ஊமைகளாகவும் நடந்து கொள்வது ஏன்என்பதைக்கேட்க வேண்டியுள்ளது.

சர்வதேச சமூகமும், ஐக்கிய நாடுகள்சபையும்மனித உரிமை மற்றும் சர்வதேச சட்டங்கள் தொடர்பாக இரண்டு விதமான அளவு கோல்களை கொண்டுள்ளனவா என்பதையும் கேட்க வேண்டியுள்ளது.

அத்துடன் மனிதாபிமானப் பணிகளுக்கும் அப்பால் சர்வதேச சமூகமும், ஐ. நாவும் பொஸ்னியாவில் துன்பப்படும் மக்களைப் பாதுகாக்கத் தவறுமேயானால் அந்த மக்கள் ஆயுதங்களைத் தூக்கி தம்மையும், தமது நிலப்பரப்பையும் பாதுகாத்துக் கொள்வது எவ்வகையிலும் தவறு ஆகாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

# புதிய தடுப்பு முகாமில் 220 தமிழ் இளைஞர்கள்

களுத்துறைவடக்கில் உள்ள சிறி லண்டாகத்தையில் புதிதாகத் தடுப்பு முகாம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இங்கு வடபகுதி உட்பட நாட்டின் பலவேறு பகுதிகளில் இருந்தும் கைது செய்யப்பட்ட சுமார் 220 தமிழ் வாலிபர்கள் எவ்வித விசாரணையுமின்றி நீண்ட நாட்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

நீண்டகாலமாக இவர்கள் எவ்வித விசாரணையுமின்றித் தடுத்து வைக்கப்பட்டிருப்பதால் இவர்களின் பெற்றோர்கள் அச்சமடைந்துள்ளனர். அத்துடன் பெரும்பாலானோர் பள்ளிப் பிராயத்தினராய் உள்ளனர்.

எனவே இவர்களின் விசாரணைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். சந்தேகத்திற்கிடமாக யாராவது இருந்தால் அவர்களை நீதிமன்றின் முன் நிறுத்தி, வழக்குத் தொடர வேண்டும். அல்லது விடுதலை செய்யப்பட வேண்டும் என பெற்றோர் கோரியுள்ளனர்.

---

### பொதுக் கூட்டம்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை மகளிர் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 7ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்குப் பாடசாலையில் நடைபெறும்.

(82)

### முதலாண்டு விழா

சமுத்திரா உற்பத்தி நிலையத்தினர் நாளை திங்கட்கிழமையன்று முதலாவது ஆண்டு நிறைவை பூர்த்திசெய்யும் வகையில் விசேட நிகழ்ச்சி ஒன்றை தொழிற்சாலை வளவில் நடத்தவுள்ளனர். காலை பத்து மணியளவில் நடைபெறவிருக்கும் இவ் விழாவில் பல முக்கிய பிரமுகர்களும் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

### சங்கக்கிளை ஆரம்பம்

(வடமராட்சி)

யாழ்ப்பாண மாவட்டச் சீமெந்து கட்டடத் தொழிலாளர் சங்கம் பருத்தித்துறைக் கிளையை இன்று 4ஆம் திகதி ஆரம்பித்து வைக்கவுள்ளது.

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் காலை 10 மணிக்குப் பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் நடைபெறும்.

இக்கூட்டத்தில் தலைமைச் சங்க நிர்வாகிகளும் தொழிற் சங்க அதிகாரிகளும் கலந்து உரை நிகழ்த்தவுள்ளனர்.

(82)

### சைக்கிள் திருட்டு

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் கடந்த 1ஆம் திகதி நடைபெற்ற கல்விகோட்ட ரீதியான உதைபந்தாட்டப் போட்டியின் போது மூன்று துவிச்சக்கர வண்டிகள் களவாடப்பட்டுள்ளன.

உதைபந்தாட்ட விளையாட்டுப் போட்டியைப் பார்க்க வந்தவர்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பெறுமதிமிக்க மூன்று துவிச்சக்கர வண்டியைக் களவாடிச் சென்றுள்ளனர்.

(82)

வத்தினர் பலரைக் கைது செய்து கொண்டு செல்வதும் இவர்களுக்கு என்னநேருகிறது

றத்துடன் திரும்பிச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

# பிரதேச செயலர் நியமனம் வடக்கு - கிழக்குக்கு இல்லை

(நமது நிருபர்)

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தின் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் பிரதேசச் செயலாளர்கள் நியமிக்கப்படமாட்டார்கள் அப்பிரதேசங்களில் அதிகாரம் மிகக் குறைவாக வழங்கப்பட்டு உதவிப் பிரதேசச் செயலாளர்கள்தான் நியமிக்கப்பட உள்ளனர் என்று அரசாங்க உயர் அதிகாரி ஒருவர் ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.

அடுத்த ஜனவரி மாதத்துடன் மாவட்ட அரசாங்க அதிபர் என்ற பதவி இல்லாதொழிக்கப்படும். அவர்களுக்குப் பதிலாக பிரதேச ரீதியில் பிரதேசச் செயலாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். ஆனால் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தின் கட்டுப்பாடு அற்ற பகுதிகளில் உதவிப் பிரதேசச் செயலாளர்களே நியமிக்கப்படுவர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

வடமாகாணத்தில் தற்போது ஒரு பிரதேசத்திற்கு மட்டுமே பிரதேசச் செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளார். ஏனைய பிரதேசங்களுக்கு இப்பதவிக்கு எவரையும் நியமிக்கும் நோக்கம் தற்போதைக்கு அரசாங்கத்திற்கு கிடையாது என்று குறிப்பிட்ட அவர் வவுனியா மாவட்டத்தில் மட்டுமே அந்த ஒரு பிரதேசச் செயலாளர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். செட்டிகுளம், நெடுங்கேணி ஆகிய பகுதிகளுக்கு பிரதேசச் செயலாளர் நியமனம் தற்போதைக்கு இல்லை என்று தெரிவித்தார்.

ஜனவரியிலிருந்து மாவட்ட அரசாங்க அதிபரின் அலுவலகம் பிரதேசச் செயலாளரின் அலுவலகமாகச் செயற்படப் போகிறது. இப்போதைய அரசாங்க அதிபர்களுக்கு பின்னர் வேறொரு பதவி வழங்கப்பட்டு தேர்தல், குடிசனமதிப்பீடு போன்ற துறைகளை மாவட்ட ரீதியில் கவனிப்பதற்கு அவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும் கல்வி, மருத்துவம் போன்ற துறைகள் கூட பிரதேசச் செயலாளர்களின் நிர்வாகத்தில் இணைக்கப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (தி)

குமரப்பா, புலேந்திரன்

# நினைவுதின ஏற்பாடுகள் தீருவிலில் தீவிரம்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை தீருவிலில் குமரப்பா, புலேந்திரன் மற்றும் 12 மாவீரர்களின்5ஆம் ஆண்டு நினைவுதின ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வடமராட்சி கிழக்கு, வடமராட்சி வடக்கு மீனவ சங்கங்கள் தீருவில் மைதானம் துப்பரவு வேலைகளை சிரமதானம் மூலம் மேற்கொண்டு வருகின்றனர்.

நாளை திங்களன்று உடுப்பிட்டி நெடியகாடு பகுதியிலிருந்துதீருவில் நோக்கி ஊர்வலம் சென்று பிற்பகல் 5 மணிக்கு தீருவிலில் பொதுக் கூட்டம் நடைபெறும். (82)

### நடுநிலையம் உதவி

மாதகல், பண்டத்தரிப்பு, சில்லாலை, இளவாலைப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து குருநகர் புனித யாகப்பர் பங்கில் உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ்-மறை மாவட்ட மனித முன்னேற்ற நடுநிலையம் உலர்-உணவு பால்மா வகைகளை வழங்கி வருகிறது.

இப்பகுதியில் அவ்வாறு தஞ்சமடைந்துள்ள 60 குடும்பங்களுக்கு பங்குத் தந்தை வண. பி. எம். இம்மனுவேல் அடிகளின் முயற்சியினால் மனித முன்னேற்ற நடுநிலையம் மேற்படி உதவிகளை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

(21)

## சாளரம் நாளை வெளிவரும்

சாளரம் இதழ் நாளை வெளிவரவுள்ளது. அக்டோபர் மாதத்திற்குரியதான இச்சாளரம் இதழில் தமிழீழ பொருளாதாரம் வளங்களும், வாய்ப்புகளும்; சி. வி. வேலுப்பிள்ளையின் தேயிலைத் தோட்டத்திலே; கணணித் திரையில் நூல்கள்; தமிழ்மொழியும் தமிழரும் என்பன போன்ற கட்டுரையும், 'சீதன அம்புகள்' விமர்சனம், திருமலை நடராசன் கதை என்பன உட்பட பல்வேறு அம்சங்களும் இடம் பெற்றுள்ளன. இளையோர் திங்கள் இதழான சாளரம் அக்டோபர் இதழ் நாளை வெளிவரும்.

# ஈழநாதம்

### தஜிகிஸ்தான் குடியரசின்

## டுஷான்பே விமானநிலையம் ரஷ்ய துருப்புகள் வசம்

[மாஸ்கோ]

முன்னாள் சோவியத்யூனியனின் தஜிகிஸ்தான் குடியரசின் தலைநகர் டுஷான்பேயிலுள்ள விமானநிலையத்தை ரஷ்யத்துருப்புக்கள் தமது கட்டுப்பாட்டின் கீழ்கொண்டு வந்துள்ளன.

விமான நிலையத்தையும் நகருக்கு வெளியேயுள்ள விமானம் பழுதுபார்க்கும் தொழிற்சாலையொன்றையும் ரஷ்யத் துருப்புகள் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளன.

தஜிகிஸ்தான் குடியரசின் ஜனாதிபதி நபியேவா வெளியேற்றப்பட்ட பின் அவரது ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்குமிடையே கடும் சண்டை நடைபெற்று வருவதாகவும், தஜிகிஸ்தான் துண்டுபட்டுவருவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

இதனிடையே தஜிகிஸ்தான் தற்காலிக ஜனாதிபதி அக்பர்ஷா இஸகந்தரோவ் காமன்வெல்த் தலைவர்களுக்கும் ஐ நாவுக்கும் அனுப்பியுள்ள இரு வெவ்வேறு விசேட செய்திகளில் சண்டையை நிறுத்த தம்மால் இயலவில்லை என்றும் உதவி வழங்கும்படியும் கேட்டுக் கொண்டுள்ளார்.

தற்போது தஜிகிஸ்தான் குடியரசில் பத்தாயிரம் ரஷ்யத்துருப்புக்கள் இருப்பதாகவும் டுஷான்பே விமான நிலைய ஓடுபாதையில் ரஷ்ய இராணுவக்ஹெலிகொப்டர்கள் நிறுத்திவைக்கப் பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

### ஜெயலலிதா மீது சுவாமி குற்றச்சாட்டு

## விசாரணை வேண்டும் ராஜாராம் கோரிக்கை

[சென்னை]

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மீது சுப்பிரமணியம் சுவாமி சாட்டியுள்ள குற்றச்சாட்டுகளை விசாரிக்க வேண்டும் என்று அ. இ. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் துணைப் பொதுச் செயலாளரும், முன்னாள் மாநில அமைச்சருமான ப ராஜாராம் கேட்டுள்ளார்.

சென்னையில் சுப்பிரமணியம் சுவாமி கலந்து கொண்ட செய்தியாளர் கூட்டத்தில் ராஜாராம் இவ்வாறு கேட்டுக் கொண்டார்.

தமிழகமுதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல்கள், அதிகார துஷ்பிரயோகங்களுக்காக அவரதுஇராஜினாமாவை வலியுறுத்த ஒரு செயற் குழு அமைத்திருப்பதாகவும், அதில். பராஜாராம்பி.வி.சாமிநாதன் இளையபெருமாள், பாண்டியன் ஆகியோர் இடம்பெற்றிருப்பதாகவும் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்தார்.

சென்னையில் நேற்றுமுன்தினம் நடந்தஇந்த செய்தியாளர்கூட்டத்தில் முன்னாள் மாநிலஅமைச்சர் திருநாவுக்கரசும் கலந்து கொண்டார்.

## அ.தி.மு.க. விலிருந்து ராஜாராம் நீக்கம்

(சென்னை)

முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற உறுப்பினருமான ப. ராஜாராம் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.

தமிழக முதல்வர் ஜெயலலிதா மீது ஜனதா கட்சித் தலைவர் டாகடர் சுப்பிரமணியம் சுவாமியினால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை செய்ய வேண்டும் எனவும், இதற்கான பிரசாரத்தை முன்னெடுக்கும் செயற்குழுவில் அங்கம் வகிப்பது எனவும், நேற்று முன் தினம் அவர் செய்தியாளர்கள் மத்தியில் தெரிவித்ததையடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாக கட்சி வட்டாரங்கள் கூறியுள்ளன.

கட்சிக்கும், அரசுக்கும் அவப்பெயரை உண்டாக்கும் விதத்தில் ராஜாராம் செயற்பட்டு வருவதாக குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. கட்சியின் சாதாரண உறுப்பினர் பதவி உட்பட அனைத்துப் பதவிகளிலிருந்தும் ராஜாராம் நீக்கப்பட்டுவிட்டார் என்று தலைமைக் கழக நிர்வாகிகளும், அமைச்சர்களும் கலந்து கொண்ட கூட்டத்தில் முடிவு எடுக்கப் பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது.

## பிராந்திய ஒத்துழைப்பு இந்தியா விருப்பம்

– சங்கர்தயாள் சர்மா

பிராந்திய ஒத்துழைப்பை

### வேதாகம பாடசாலை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சிவானந்த குருகுல கட்டடத்தில் நாளைய தினம் திங்கட்கிழமை விஜயதசமியன்று வேதாகம பாடசாலை ஆரம்பமாக உள்ளது. இங்கு வேதம்,

## வீரச்சாவு

### கப்டன் வேங்கைமாறன்



மன்னார் ஓமந்தையிலிருந்து 30-09-92 அன்று முன்னேறிய சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் விடுதலைப் புலிகள்போராளி கப்டன் வேங்கைமாறன் (ஞானசேகர் - சீமான் சூசை லிபேரரூஸ் எற்றிசிங், 6ஆம் வட்டாரம் வங்காலை) வீரச்சாவு அடைந்தார்.

### கப்டன் காசி



முருங்கன் பகுதியில் 01-10-92 அன்று பகல் 1.00 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட- ''ரொக்கட் மோட்டார்'' தாக்குதலில் கப்டன் காசி (சூசை ஸ்ரனிஸ்லாஸ் குமாரையன்குளம் அடம்பன்) என்னும் போராளி வீரச்சாவு அடைந்தார்.

### 2ஆம் லெப். சுகந்தன்



### வவுனியா மாவட்டத்தில்

## அரசின் சேவை, சலுகை மக்களுக்கு கிடைக்கவில்லை

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் அரசாங்கத்தின் சேவைகளையும், சலுகைகளையும் பெற முடியாமல் மக்கள் திண்டாடுகின்றனர் என்பதை நான்உணருகிறேன். எனது பிரதேசத்தில் என்னால் முடிந்த அளவிற்கு மக்களுக்குச் சேவை செய்ய முயற்சிக்கிறேன்..

இவ்வாறு வவுனியா தமிழ்ப் பிரிவுப் பிரதேசச் செயலாளர் திரு. அமிர்தலிங்கம் ஈழநாதம் நிருபரிடம் தெரிவித்தார்.

அவர் திடீர் என்று தமது நிர்வாகத்தின் கீழ் உள்ள நகரம் தவிர்ந்த ஏனைய பகுதிகளுக்கு வருகை தந்திருந்த போது கடந்த 30 ஆம் திகதி இடம்பெற்ற சந்திபபில் இதனைத் தெரிவித்தார்.

பிரதேசச் செயலாளர் என்ற ரீதியில் ஏராளமான உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. பாதிப்படைந்த மக்களைத் துன்பத்திலிருந்தும், துயரத்திலிருந்தும் தூக்கிவிடுவதே தன் நோக்கம் என்று அவர் தெரிவிததார்.

1990 ஜூன் மாதத்தின்பின்னர் இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நகரம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் படும் கஷ்டங்களை அங்கு அவரிடம் சுட்டிக் காட்டியபோது சம்பந்தப்பட்ட துறைகளின் உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பேன் என்றார்.

செயற்படாமல் உள்ள கமநல சேவை நிலையங்களைச் செயற்படுத்துவதற்கும், அவற்றிற்கு விவசாய விதை பொருள்கள், உரம், கிருமிநாசினி வகைகள் அனுப்பி வைப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாகவும், சுகாதார வைத்திய வசதிகள் இல்லாமல் பாதிப்படைந்து வரும் மக்களைச் சந்தித்திருப்பதாகவும், செஞ்சிலுவைச் சங்கம், சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு மருந்துப் பொருள்கள் அனுப்பி வைப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நீண்ட காலமாகப் புனர்வாழ்வு அட்டை வழங்கப்பட்டும் நிவாரணம் பெற முடியாமல் அலையும் மக்களின் நிலையைச் சுட்டிக்காட்டியபோது வெகு விரைவில் அவர்கள் நிவாரணம் பெற நடவடிக்கை மேற்கொள்வதாகக் குறிப்பீட்டார்.

அரசாங்கத்தினால் தடைசெய்யப்பட்டுள்ள சில அவசியமான பொருள்களை மக்கள் பெறுவதற்கு நடவடிக்கை எடுப்பீர்களா என்று கேட்டபோது, தான், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இதுபற்றிப் பேசுவதாகவும், ஆனால் இராணுவம் அற்ற பகுதிகளுக்கு சைக்கிள் போன்ற பொருள்களை அனுப்பி வைக்கும் நோக்கம் இராணுவ அதிகாரிகளுக்கில்லை என்றும் தெரிவித்தார்.

குண்டுவீச்சினால் சேதமடைந்த பாடசாலைகளில் புதிய ஓலைக் குடிசைகள் அமைத்து அங்கு மாணவர்களை தங்க வைத்து கல்வி புகட்டுவதற்கு அரசினால் பணம் அனுப்பி வைக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

தற்காலிக ஆசிரியர் நியமனங்களை இரததுச் செய்யும்படி கல்வித் திணைக்களத்தைக் கோரப் போவதாகவும் முன்னர் பணிபுரிந்த பாடசாலைகளிலேயே ஆசிரியர்களை நியமிக்க ஒழுங்கு செய்யப் போவதாகவும் அவர் குறிப்பிட்டார். (தி)

### யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே

## கோட்ட மட்டத்திலான இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையேயான கோட்டமட்டத்திலான உதைபந்தாட்டப் போட்டிகளில் இன்றைய போட்டிகளின் விபரம் வருமாறு:

வடமராட்சிக்கோட்டத்தில் நெல்லியடி மகா வித்தியாலய மைதானத்தில் மாலை 3 மணிக்கு 19 வயதுபிரிவில் தேவரையாளி இந்துக்கல்லூரி எதிர் விக்கினேஸ்வராக் கல்லூரி, பிற்பகல் 4 15 மணிக்கு பொன்னம்பலம் வித்தியாலயம் எதிர் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன், டயமன் விளையாட்டரங்கில் 19 வயது பிரிவில் மாலை 3 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் எதிர் ஹாட்லிக்கல்லூரி.

சாவகச்சேரியில் கோட்ட மட்டத்திலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகளின் கால் இறுதிப் போட்டிகள் நாளை திங்கட்கிழமையன்று நடைபெறவுள்ளது இப் போட்டிகளில் கைதடி நுணாவில் அ.த.க பாடசாலையை எதிர்த்து உசன் இராமநாதன் மகாவித்தியாலயமும், கச்சாய் அ.த.க. பாடசாலையை எதிர்த்து சாவகச்சேரி இந்துக் கல்லூரியும், எழுதுமட்டுவாள் கணேசா வித்தியாலயத்தை எதிர்த்து வரணி மகாவித்தியாலயமும், நாவற்குழி மகாவித்தியாலயததை எதிர்த்து மட்டுவில் மகாவித்தியாலயமும் மோதவுள்ளன இந்தஆட்டங்கள்யாவும் சாவகச்சேரி இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

திருமலையில்

அல்விமுத்து ஜெயச்சந்திரன் (27). சிறிஸ்கந்தராஜா ஸ்ரீரஞ்சன் (24), புண்ணியமூர்த்தி சணபதிப்பிள்ளை (55), வடிவேல் செல்வரத்தினம் (27), நற்சிங்கம் சௌந்தரராஜா

தலைமை

கேட்டுக் கொண்டதாகவும் அதனையடுத்து அவர் கட்சிம் தலைவராக தொடர்ந்து நீடித்தாலும் ஜனாதிபதி தேர்தலில் அனுரா நிறுத்தப்படுவதையே விரும்புவதாகவும் தெரிவீக்கப்படுகிறது.

நடவடிக்கை

ராணுவ

ஏற்பட்ட உயிரிழப்பை மிகவும் குறைத்துக் காட்டியுள்ளதோடு, பாரிய இராணுவத் தளபாட இழப்புப்பற்றி எதையும் வெளியிடாமல் இருட்டடிப்புச் செய்துள்ளன.

இதே போன்றே பதவியாவில் மினிமுகாம் மீது மேற்கொண்ட தாக்குதலை சிங்களக் குடியேற்றம் மீது மேற்கொண்ட தாக்குதலாகத் தெரிவித்துள்ளது.

இங்கு ஏற்பட்டஉயிரிழப்பை வெகுவாகக் குறைத்து வெளியிட்டுள்ளதோடு, பதவியாவில் தாம இழந்த ஆயுதம் குறித்து பேச்சு எதுவும் விடாமல் இருந்துவிட்டது.

குடியிருப்பு

சுவாமி கலந்து கொண்ட செய்தியாளர் கூட்டத்தில் ராஜாராம் இவ்வாறு கேட்டுக் கொண்டார்.

தமிழகமுதலமைச்சர்செல்வி ஜெயலலிதா மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல்கள், அதிகார துஷ்பிரயோகங்களுக்காக அவரதுஇராஜினாமாவை வலியுறுதத ஒரு செயற் குழு அமைத்திருப்பதாகவும், அதில். பராஜாராம்பி.வி.சாமிநாதன் இளையபெருமாள், பாண்டியன் ஆகியோர் இடம்பெற்றிருப்பதாகவும் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்தார்.

ப. ராஜாராம்] அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.

தமிழக முதல்வர் ஜெயலலிதா மீது ஜனதா கட்சித் தலைவர் டாகடர் சுப்பிரமணியம் சுவாமியினால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை செய்ய வேண்டும் எனவும், இதற்கான பிரசாரத்தை முன்னெடுக்கும் செயற் குழுவில் அங்கம் வகிப்பது எனவும், நேற்று முன் தினம் அவர் செய்தியாளர்கள் மத்தியில் தெரிவித்ததையடுத்து இந்த அவப்பெயரை உண்டாக்கும் விதத்தில் ராஜாராம் செயற்பட்டு வருவதாக குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. கட்சியின் சாதாரண உறுப்பினர் பதவி உட்பட அனைத்துப் பதவிகளிலிருந்தும் ராஜாராம் நீக்கப்பட்டு விட்டார் என்று தலைமைக் கழக நிர்வாகிகளும், அமைச்சர்களும் கலந்து கொண்ட கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது.

# பிராந்திய ஒத்துழைப்பு இந்தியா விருப்பம்

**– சங்கர்தயாள் சர்மா**

பிராந்திய ஒத்துழைப்பை பேண இந்தியா விரும்புகிறது என்று இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தாயாள்சர்மா தம்மைச் சந்தித்த சிறீலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவிடம் கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில் இரு நாடுகளுககும் இடையிலான உறவைப் பலப்படுத்தி பிராந்திய ஒத்துழைப்பை பேண இந்தியா விரும்புகிறது. இலங்கை மக்களின் வழமையான வாழ்க்கை தொடர்ந்து சீர்குலைந்து வருவதுடன் ''உங்கள் அழகான நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு அச்சுறுத்தலாக இருக்கும் இனப் பிரச்சினைக்கு விரைவாக தீர்வைக் காண வேண்டும்'' என்றும் கேட்டுக் கொண்டார்

## தவறிவிட்டது

30-09-92 இல் கிளாலி போக்குவரத்துப் பாதையில் பயணத்தின் போது ஆலங்கேணியில் உடுப்புப் பார்சல் காணாமல் போய்விட்டது. பட்டர் கலர் மண்ணிறம் சேர்ந்த சேலை 1, பட்டர்கலரும் குங்குமகலரும் சேர்ந்த சேலை 1, குங்குமகலரும் பச்சையும் சேர்ந்த சேலை 1 (காஞ்சிபுரங்கள்-3) கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(3313) திருமதி இ. வர்னேந்திரன்

## மரண அறிவித்தல்

### திருமதி சற்குணதேவி கந்தசாமி

இளவாலை முள்ளானையில் வசித்தவரும் தற்போது கிளிநொச்சியில் வசித்தவருமான திரு. T. கந்தசாமியின் அன்பு மனைவி, சந்திரா என அழைக்கப்படும் சற்குணதேவி ( 1-10-1992 வியாழக்கிழமை ) அகால மரணமானார்.

இவர் காலஞ் சென்ற வே. பரமேஸ்வரனின் தற்போது மானிப்பாயில் வசிக்கும் சந்தனம் ஆகியோரின் புதல்வியும், சுதர்ஜினி (ஜினா) (இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்) சுசந்தன், சுதாகர் ஆகியோரின் அன்புத் தாயாரும், சகுந்தலாதேவி, வரதராசா, சத்தியவதி, இரங்கநாதன், உமாசுதன், பாபு (யாழ். பல்கலைக் சழகம்) ஆகியோரின் சகோதரியும், சுப்பிரமணியம் (N. T. M. ஸ்ரோர்ஸ் கிளிநொச்சி) கிருபானந்தன், கலா, செல்வராஜி ஆகியோரின் அருமை மைத்துனியுமாவார்.

மரணச்சடங்குகள் கிளிநொச்சியில் திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு (5-10-92) நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

N. T. M. ஸ்ரோர்ஸ்
கிளிநொச்சி

தகவல்
ப. இரங்கநாதன்
(சகோதரன்)

(3310)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 04ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது

## வேதாகம பாடசாலை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சிவானந்த குருகுல கட்டடத்தில் நாளைய தினம் திங்கடகிழமை விஜயதசமியன்று வேதாகம பாடசாலை ஆரம்பமாக உள்ளது. இங்கு வேதம், ஆகமம், வடமொழி இலக்கியம், வடமொழி இலக்கணம், தமிழ்மொழி, சித்தாந்தம், பொது அறிவு ஆகிய பாடங்கள் போதிககப்பட உள்ளன. குருகுல மாணவர்களுக்கான இப்போதனைநெறியில்இணைந்து கொள்வதற்கான அனுமதி இலவசமானது என்பது குறிப்பிடத்தக்கது, விண்ணப்பிக்க விரும்புவோர் ஒன்றியத்தின் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளும்படி ஒன்றியச் செயலாளர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## மேஜர் முரளி ஞாபகார்த்த போட்டிகள்

மேஜர் முரளி ஞாபகார்த்த விளையாட்டுப் போட்டிகளில் இன்று முத்துத்தம்பி மகா வித்தியாலய மைதானத்தில் காலை 9-00 மணிக்கு தாச்சி சுற்றுப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் ஆண்கள் பிரிவில் கைதடி கொத்தணி எதிர் சுதுமலை வடக்கு தமிழ்க்கலவன் பாடசாலை, மண்டைதீவு கொத்தணி எதிர் குடத்தனை கரையூர் றோமன் கத்தோலிக்க பாடசாலை, அல்வாய் சின்னத்தம்பி மகா வித்தியாலயம் எதிர் கோண்டாவில் இந்து வித்தியாலயம்.

பெண்கள் பிரிவில் அல்வாய் சின்னத்தம்பி மகாவித்தியாலயம் எதிர் அரசடி சைவப்பிரகாச வித்தியாலயம் கோண்டாவில் கொத்தணி எதிர் மல்லாகம் கொத்தணி.

உதைபந்தாட்டப் போட்டிகள் மாலை 3-00 மணிக்கு மருத்துவ வளாக மைதானத்தில் நடைபெறும். இப் போட்டிகளில் புனிதசம்பத்திரிசியார் கல்லூரி எதிர் உரும்பராய் இந்துக்கல்லூரி, நெல்லியடி மகாவித்தியாலயம் எதிர் ஹென்றியரசர் கல்லூரி என்பன பங்கு கொள்ளும்.

முருங்கன் பகுதியில் 01-10-92 அன்று பகல் 1 00 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட- ''ரொக்கட் மோட்டார்'' தாக்குதலில் கப்டன் காசி (சூசை ஸ்ரனிஸ்லாஸ் குமாரையன்குளம் அடம்பன்) என்னும் போராளி வீரச்சாவு அடைந்தார்.

## 2ஆம் லெப். சுகந்தன்



அடம்பன் பகுதியில் 30-09-92 அன்று இடம்பெற்ற மோதலில் விழுப்புண் அடைந்த 2ஆம் லெப்டினன்ட் சுகந்தன் (செல்லத்தம்பி ஞானேந்திரன் உப்புக்குளம்மன்னார்) என்னும் போராளி 01-10-92 அன்று வீரச்சாவு அடைந்தார்.

## வீரவேங்கை குயிலன்



இயக்கச்சிப் பகுதியில் 01-10-92 அன்று சிறிலங்கா இரணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் வீரவேங்கை குயிலன் (ஜெயராசா ஜெயரேபன் குரும்பசிட்டி தெல்லிப்பளை) என்னும் போராளி வீரச்சாவு அடைந்தார்.

இந்நான்கு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

சகு 19 வயதுபிரிவில் தேவரையாளி இந்துக்கல்லூரி எதிர் விக்கினேஸ்வராக் கல்லூரி, பிற்பகல் 4 15 மணிக்கு பொன்னம்பலம் வித்தியாலயம் எதிர் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன், டயமன் விளையாட்டரங்கில் 19 வயது பிரிவில் மாலை 3 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் எதிர் ஹாட்லிக்கல்லூரி.

சாவகச்சேரியில் கோட்ட மட்டத்திலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகளின் ... எதிர்த்து வரணி மகாவித்தியாலயமும், நாவற்குழி மகா வித்தியாலயததை எதிர்த்து மட்டுவில் மகாவித்தியாலயமும் மோதவுள்ளன இந்தஆட்டங்கள்யாவும் சாவகச்சேரி இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

### திருமலையில்

அல்விமுத்து ஜெயச்சந்திரன் (27), சிறிஸ்கந்தராஜா ஸ்ரீரஞ்சன் (24), புண்ணியமூர்த்தி கணபதிப்பிள்ளை (55), வடிவேல் செல்வரத்தினம் (27), நற்சிங்கம் சௌந்தரராஜா (27), சேவியர் நிர்மலாதேவி (39), கிருஷ்ணன் மகேந்திரராசா (40), கணபதிப்பிள்ளை நவரத்தினராசா (24), வேலுக்குட்டி துரைநாயகம் (26), தம்பிஐயா யோகராசா (27), தம்பிஐயா இந்திரகுமார்[23], முத்துவேல் அரசரட்னம்[25], பொன்னம்பலம் தர்மசீலன் (27), சித்திரவேல் கருணாகரன் (26), கனகரத்தினம் காஞ்சிராசா (42), புண்ணியமூர்த்தி கருணாகரன் (24), சபாரத்தினம் நீதியழகன்(23), தங்கராசா பொன்னம்பலம் (41), சின்னத்தம்பி அழகுராசா (39), நல்லரத்தினம் சூரியகுமார் (36), கணேஸ் ரஞ்சன் (34), கருப்பையா முத்துலிங்கம்(20), ராசநாதன் ஆனந்தன்(42), சேனையூரைச் சேர்ந்தவர்களான வேல்முருகு சிவசுந்தரம் (28), முருகேச பிள்ளை நவசிவாயம் (27), கனகலிங்கம் ரத்தினகுமார் (26), உதயராசா ராசம்மா (24), கதிர்காமத்தம்பி இராசலிங்கம் (26), நடராசா சந்திரலிங்கம் (28), சுப்பிரமணியம் கோணேசலிங்கம் (27), ஐயாத்துரை சந்திரலிங்கம் (25), முருகுப்பிள்ளை யோகானந்தம் (24), முத்துவேல் உதயராசா (24) ஆகியோரே இராணுவத்தால் கைதானவர்களாவர்.

### தலைமை

கேட்டுக் கொண்டதாகவும் அதனையடுத்து அவர் கட்சிம் தலைவராக தொடர்ந்து நீடித்தாலும் ஜனாதிபதி தேர்தலில் அனுரா நிறுத்தப்படுவதையே விரும்புவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### நடவடிக்கை

அமைய பிரிகேடியர்கள் ரவி விஜாட்ண, சரத் பெரேரா ஆகியோரின் உதவியுடன் வட பிரதேச தளபதி ஜெரி சில்வா இந் நடவடிக்கையை மேற்கொண்டார் நேற்றுக் காலையுடன் இந் நடவடிக்கைகள் பூர்த்தியடைந்தன என அறிவித்துள்ள இவ் வட்டாரங்கள் நேற்று மாலை 6 00 மணியுடன் மன்னார் மாவட்டத்தில் ஊரடங்கு நீக்கப்பட்டுள்ளதாகவும் அறிவித்துள்ளன.

ராணுவ

ஏற்பட்ட உயிரிழப்பை மிகவும் குறைத்துக் காட்டியுள்ளதோடு, பாரிய இராணுவத் தளபாட இழப்புப்பற்றி எதையும் வெளியிடாமல் இருட்டடிப்புச் செய்துள்ளன.

இதே போன்றே பதவியாவில் மினிமுகாம் மீது மேற்கொண்ட தாக்குதலை சிங்களக் குடியேற்றம் மீது மேற்கொண்ட தாக்குதலாகத் தெரிவித்துள்ளது.

இங்கு ஏற்பட்டஉயிரிழப்பை வெகுவாகக் குறைத்து வெளியிட்டுள்ளதோடு, பதவியாவில் தாம் இழந்த ஆயுதம் குறித்து பேச்சு எதுவும் விடாமல் இருந்துவிட்டது.

### குடியிருப்பு

கட்டுவன், தெல்லிப்பளைப் பகுதிகளில் உள்ள சிறிலங்கா இராணுவக் காவலரண்களில் இருந்து தொடர்ச்சியான துப்பாக்கிப் பிரயோகமும் கலிபர் தாக்குதலும் நடாத்தப்பட்டன. இடையிடையே எறிகணைகளும் வீசப்பட்டன.

மேலும் இப்பகுதி வான் பிராந்தியத்தில் வேவு விமானங்கள் வட்டமிட்டு நோட்டமிட்டன. உலங்குவானூர்திகளும் ஓயாமல் பறந்து திரிந்தன. (க), (11)

## உள் வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**03-10-92**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 5970

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:

26-5206, 26-382, 41-8035, 24-5092, 42-9326, 24-9938, 27-1494, 26-535, 24-4957, 26-1791, 42-7312, 40-1714, 41-6893, 27-8515, 24-2161, 26-3321, 43-1857, 25-7486, 25-4537, 26-3437.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:

42 9625, 40-2249, 28-732, 28-1020, 28-0657, 40-2394, 26-6984, 26-525, 24-5119, 24-2288, 24-9744 24-4747, 24-5437, 40-7584, 26-5493, 26-7525, 24-5496


யாழோசையின்

இசை வகுப்புகள்

புல்லாங் குழல்
வயலின்
கிற்றார்
ஓகன் ஆகியன
விஜயதசமி அன்று
[5-10-92 திங்கள்]
மாலை 5 00 இற்கு
ஆரம்பிக்கப்படும்

61, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (3294)